10.11.2017

தி இந்து

தமிழால் இணைவோம்

# கடலோர மாவட்டங்களில் மீண்டும் கனமழை: வானிலை ஆய்வு மையம் தகவல்



தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக கடலோர மாவட்டங்களில் வரும் 12-ம் தேதி முதல் கனமழை இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவ மழை தொடங்கியதை அடுத்து வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நிலை கொண்டுள்ளது. இதனால் தமிழகத்தில் மீண்டும் மழை தொடங்கியுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களை சந்தித்த வானிலை ஆய்வு மைய இயக்குனர் பாலச்சந்திரன் கூறியதாவது:

"நேற்று தென் கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியானது மேற்கு திசை நோக்கி தென் மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவுகிறது. கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது.

அதிகப்பட்சமாக கன்னியாகுமரி தக்கலையில் 5 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

அடுத்து வரும் இரு தினங்களை பொறுத்தவரையில் நவ.12 காலை தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை இருக்கும். கனமழையைப் பொறுத்தவரை தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

சென்னையை பொறுத்தவரை இடைவெளி விட்டு சிலமுறை மழை இருக்கும். சில நேரம் சற்று கனமழை இருக்கும். தற்போது கடலோர மாவட்டங்களில் மூன்று நாட்களுக்கு மழை இருக்கும். மிதமான மழையாகத் தொடரும். அடுத்து தாழ்வுப் பகுதி நகர்வை ஒட்டி உள்மாவட்டங்களில் மழை தொடரும்.

வடகிழக்குப் பருவமழையானது தமிழகம் மற்றும் புதுவையில் கடந்த அக் 1 முதல் இன்று நவ.10 வரை 24 செ.மீ. மழை பெய்துள்ளது. எதிர்பார்க்கப்பட்ட இயல்பான மழை அளவு 26 செ,மீ". இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கடலோர பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்பு

சென்னை வானிலை ஆய் வு மைய அதிகாரி கள் கூறியதாவது: அந்தமான் கடல் பகுதி மற்றும் மலேசிய தீபகர்ப்பத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் நிலவிவந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, தற்போது தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் மையம் கொண்டுள்ளது. அதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்யும்.

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சில இடங்களில் இரவு அல்லது அதிகாலை நேரங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பாளையங்கோட்டையில் 7 செமீ மழை பதிவாகியுள்ளது.

கரூர் பரமத்தியில் 6 செமீ, நெல்லை மாவட்டம் பாபநாசத்தில் 5 செமீ, மதுரை தெற்கு, மதுரை விமான நிலையம், குன்னூர் ஆகிய இடங்களில் தலா 4 செமீ, தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம், கோவில்பட்டி, திருப்பூர் மாவட்டம் தாராபுரம், விருதுநகர் மாவட்டம் சாத்தூர், தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் ஆகிய பகுதிகளில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது.